සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I
கிறிஸ்தவ நாகரிகம் I
Christian Civilization I

49 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**கவனிக்க :**

- இவ்வினாத்தாள் **6 பக்கங்களில் 50** வினாக்களைக் கொண்டுள்ளது.
- ***எல்லா*** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது ***சுட்டெண்ணை எழுதுக.***
- விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் ***சரியான*** அல்லது ***மிகப் பொருத்தமான*** விடையைத் தெரிந்தெடுத்து, ***அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய*** விடைத்தாளில் ***புள்ளடி*** (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. பின்வருவனவற்றுள் சமாரியா குறித்த சரியான கூற்று / கூற்றுகள்
   A - சமாரியா யூதேயாவிற்கும் கலிலேயாவிற்கும் இடையில் அமைந்துள்ளது.
   B - சமாரியா யோர்தான் நதியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.
   C - சமாரியர்கள் கி.மு. 721இல் அசீரியர்களால் வெளியேற்றப்பட்டார்கள்.
   (1) A மாத்திரம் (2) A யும் B யும் மாத்திரம் (3) B யும் C யும் மாத்திரம்
   (4) A யும் C யும் மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம்

2. பபிலோனிய அடிமைத்தனத்திலிருந்த யூதர்கள் கி.மு. 587இல் விடுவிக்கப்பட்டது,
   (1) பபிலோனிய மன்னனால் (2) கிரேக்க மன்னனால் (3) உரோமையர்களால்
   (4) மக்கபேயரால் (5) பாரசீக மன்னனால்

3. கெரிசிம் மலையில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது,
   (1) ஏதோம் மக்களால் (2) கிரேக்கர்களால் (3) பெஞ்சமின் குலத்தவர்களால்
   (4) சமாரியர்களால் (5) பெரிய ஏரோது மன்னனால்

4. 'சென்த்திரின்' எனப்படுவது
   (1) யூதர்களின் பொதுச் சங்கம் இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.
   (2) யூதத் திருமணச் சடங்கு
   (3) ஒரு யூதத் திருவிழா
   (4) யூதத் தோராவிற்கான பெயராகும்.
   (5) யூதப் பலிக்கான பெயராகும்.

5. பின்வரும் கூற்றுகளுள் மிகவும் சரியானது / சரியானவை
   A - மலைப்பொழிவின் மூலம் இயேசு 'புதிய மோசேயாகப்' பெயரிடப்பட்டார்.
   B - மலைப்பொழிவில் உள்ளடக்கப்பட்டிருப்பது எட்டுப் பேறுகளாகும்.
   C - மலைப்பொழிவு புதிய ஏற்பாட்டின் புதிய சட்ட நூலாகும்.
   (1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
   (4) A யும் B யும் மாத்திரம் (5) B யும் C யும் மாத்திரம்

6. பின்வருவனவற்றுள் திருச்சபையின் பிறப்பு (நிகழ்ந்த) விழாவானது,
   (1) கிறிஸ்மஸ் விழா (2) உயிர்ப்பு விழா (3) பெந்தகோஸ்தே விழா
   (4) திருக்காட்சி விழா (5) ஆண்டவரின் திருமுழுக்கு விழா

7. வட அரசில் இறைவாக்குரைத்த இறைவாக்கினர்கள்
   (1) ஆமோஸ், ஓசேயா, எரேமியா (2) ஆமோஸ், ஓசேயா, மலாக்கி
   (3) எசேக்கியேல், ஆகாய், மலாக்கி (4) ஆமோஸ், ஓசேயா, எலிசா
   (5) ஆமோஸ், எசெக்கியேல், யோவேல்

[பக். 2 ஐப் பார்க்க

8. புனித பவுலின் பிறப்பிடம்
(1) ஜெருசலேம் (2) தார்சு (3) உரோம்
(4) ஜெரிக்கோ (5) தமஸ்கு

9. பவுலை சிறைக்கைதியாக உரோமுக்குக் கொண்டு செல்லும் வழியில், புயல் காற்றினால் கப்பல் உடைந்தபோது தப்பிச் சென்றடைந்த தீவு
(1) கிரேத்து (2) சைப்பிரஸ் (3) எபேசு
(4) மால்தா (5) சிசிலி

10. திருத்தொண்டர் பிலிப்பு காசா செல்லும் வழியில் தேரிலேறி இறைவார்த்தையை யாருக்கு விளக்கிக் கொண்டிருந்தார் ?
(1) ஒரு சமாரியனுக்கு (2) ஓர் எத்தியோப்பிய அண்ணகனுக்கு
(3) ஒரு சிரிய தொழு நோயாளிக்கு (4) ஓர் உரோமை நூற்றுவர் தலைவனுக்கு
(5) ஓர் அந்தியோக்கிய நாட்டவருக்கு

11. கிறிஸ்தவர்கள் வேதகலாபனைக் காலத்தில் இரகசியமாக எங்கே திருப்பலி நிறைவேற்றினார்கள் ?
(1) சுரங்கக் கல்லறைகளில் (கற்றகூம்) (2) வீட்டின் பாதுகாப்பான இடத்தில்
(3) குகைகளில் (4) காடுகளில்
(5) தொழுகைக்கூடங்களில்

12. உரோமைப் பேரரசன் டயக்ளேசியன் ஆட்சிக்காலத்தில் மறைசாட்சியர்களாக மரித்த **மூன்று** கிறிஸ்தவர்கள்
(1) புனித சிசிலி, புனித செபஸ்தியார், புனித வின்சென்ட்
(2) புனித தமியான், புனித இஞ்ஞாசியார், புனித லோரன்ஸ்
(3) புனித செபஸ்தியார், புனித அக்னஸ், புனித லூசியா
(4) புனித கொஸ்மஸ், புனித ஆகத்தம்மாள், புனித ஜஸ்ரின்
(5) புனித லோரன்ஸ், புனித ஜஸ்ரின், புனித அக்னஸ்

13. திருத்தூதர் பவுல், திருத்தூதர் பேதுருவைப் போன்று சிலுவையில் அறையப்படாமல் சிரச்சேதம் செய்யப்பட்டது ஏன் ?
(1) அவர் ஒரு கைதியாக இருந்தமையால்
(2) அவர் ஒரு வெளிநாட்டவராக இருந்தமையால்
(3) அவர் ஓர் உரோமைக் குடிமகனாக இருந்தமையால்
(4) அந்நேரத்தில் சிலுவையில் அறையப்படுதல் நீக்கப்பட்டு விட்டதால்
(5) உரோமை மாநகரில் சிலுவையில் அறையப்படுதல் நீக்கப்பட்டு விட்டதால்

14. "மரியாள் இறைவனின் தாயல்ல" என்கின்ற பேதகத்தினை முதலில் எடுத்துரைத்தவர் யார் ?
(1) அலெக்சாந்திரிய சைனிசியஸ் (2) பெலாஜியுஸ்
(3) ஆரியுஸ் (4) நொஸ்ரோரியர்
(5) அந்தியோக்கிய ஆயரான பவுல்

15. அயர்லாந்து நாட்டிற்கு கிறிஸ்தவத்தை எடுத்துச்சென்ற மறைபரப்பாளர் யார் ?
(1) புனித கொலம்பான் (2) புனித ஸ்தேவான் (3) புனித பீட்ஸ்
(4) புனித தமியான் (5) புனித பற்றிக்

16. சிலோவிக் நாடுகளுக்கு நற்செய்தியினைக் கொண்டு வந்த **இரண்டு** துறவிகள்
(1) புனித கொஸ்மஸ், புனித தமியான் (2) புனித சிரில், புனித மெத்தோடியஸ்
(3) புனித ஹைசிந், புனித சிரில் (4) புனித சிரில், புனித தமியான்
(5) புனித மெத்தோடியஸ், புனித வின்சென்ட்

17. சிலுவைப் போர்கள் உண்டாவதற்கான பிரதான காரணம்
(1) புனித நாட்டை முஸ்லிம்களிடமிருந்து விடுவிக்க
(2) இஸ்லாமிய சக்தியினைத் தோற்கடிக்க
(3) ஸ்பெயின் நாட்டை முஸ்லிம்களிடமிருந்து விடுவிக்க
(4) முஸ்லிம் படையெடுப்பிலிருந்து ஐரோப்பாவைப் பாதுகாக்க
(5) துருக்கிக்கும் பிரான்ஸ் இற்கும் இடையில் காணப்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக

[பக். 3 ஐப் பார்க்க

18. மேற்குலக துறவற வாழ்வின் தந்தையெனக் கருதப்படுபவர்
    (1) புனித சிரில் (2) புனித வனத்து அந்தோனியார் (3) புனித பக்கோமியஸ்
    (4) புனித ஆசீர்வாதப்பர் (5) புனித அகுஸ்தீனார்

19. பின்வருவனவற்றில் மத்திய காலத்தில் திருச்சபை சீர்குலைந்து போனமைக்கான பிரதான காரணங்கள் **இரண்டு**
    A - அளவுக்கதிகமான குருக்கள்
    B - திருச்சபைத் தலைவர்கள் லௌகீக வாழ்க்கை முறைக்கு மாறியமை
    C - குருக்களின் போதிய கல்வி அறிவின்மை
    D - தகுதியில்லாத நபர்கள் திருச்சபையில் முக்கிய பதவிகளைத் தக்கவைத்துக் கொண்டமை
    E - குருக்களுக்கு மக்களைச் சந்திப்பதில் காணப்பட்ட சிக்கல்கள்
    (1) A யும் B யும் (2) B யும் D யும் (3) A யும் D யும்
    (4) B யும் E யும் (5) C யும் E யும்

20. மத்தியகால சமூகத்தின் சிந்தனையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய அமைப்பு
    (1) மறுமலர்ச்சி (2) சமயச்சார்பின்மை (3) பிரான்சியப் புரட்சி
    (4) சோஷலிசம் (5) கம்யூனிசம்

21. திரிதெந்தீன் பொதுச்சங்கத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட **இரண்டு** திருச்சபைத் தலைவர்கள்
    (1) புனித பெரிய கிரகோரியார், புனித சாள்ஸ் பொரோமெயோ
    (2) புனித பெரிய கிரகோரியார், திருத்தந்தை 5ஆம் பயஸ்
    (3) புனித டோமினிக்கு, புனித பிரான்சிஸ் அசிசியார்
    (4) திருத்தந்தை 5ஆம் பயஸ், புனித சாள்ஸ் பொரோமெயோ
    (5) புனித லொயோலா இஞ்ஞாசியார், புனித சாள்ஸ் பொரோமேயோ

22. கிழக்கின் அப்போஸ்தலர் எனக் கருதப்படுகின்ற ஐரோப்பிய புனிதர்
    (1) முத்திப்பேறுபெற்ற ஜோசப் வாஸ் (2) புனித பதுவா அந்தோனியார்
    (3) புனித பிரான்சீஸ் சவேரியார் (4) புனித லொயோலா இஞ்ஞாசியார்
    (5) புனித வின்சென்ட் டி பவுல்

23. மத்தியகால திருச்சபையின் மறுமலர்ச்சிக்குப் பங்களிப்பினை நல்கிய **இரண்டு** கார்மேல் சபைத் துறவியர்
    A - புனித சிலுவை அருளப்பர்
    B - புனித பிரான்சிஸ் டி சேல்ஸ்
    C - குழந்தை இயேசுவின் சிறு மலரான புனித தெரேசா
    D - புனித பிலிப் நேரியார்
    E - புனித அவில்லா தெரேசா
    (1) A யும் C யும் (2) A யும் E யும் (3) B யும் D யும்
    (4) B யும் E யும் (5) C யும் E யும்

24. போர்த்துக்கேயரால் கட்டப்பட்டு புனித லோரன்ஸ்க்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் அமைந்துள்ள இடம்
    (1) நீர்கொழும்பு (2) சிலாபம் (3) காலி
    (4) யாழ்ப்பாணம் (5) கொழும்பு

25. போர்த்துக்கேயரின் ஆட்சியின்போது இலங்கையில் பணியாற்ற வருகை தந்த **நான்கு** துறவற சபைகள்
    (1) பிரான்சிஸ்கன், அமலமரித் தியாகிகள், அகுஸ்தீனியன், சலேசியன்
    (2) பிரான்சிஸ்கன், இயேசு சபையினர், டொமினிக்கன், அகுஸ்தீனியன்
    (3) இயேசு சபையினர், சலேசியன், டொமினிக்கன், ஓரோட்டேரியன்
    (4) பிரான்சிஸ்கன், இயேசு சபையினர், சலேசியன், ஆசீர்வாதப்ப சபையினர்
    (5) டொமினிக்கன், அகுஸ்தீனியன், ஓரோட்டேரியன், அமலமரித் தியாகிகள்

26. இலங்கையின் கல்வித்துறையில் பணியாற்ற முதலில் வருகை தந்த **மூன்று** பெண் துறவற சபைகள்
    A - திருக்குடும்பக் கன்னியர் சபை
    B - நல்லாயன் சபையினர்
    C - சிலுவைக் கன்னியர் சபை
    D - தேவ பராமரிப்புச் சபை
    E - பிரான்சிஸ்கன் கன்னியர் சபை
    (1) A யும் C யும் D யும் (2) B யும் C யும் D யும் (3) C யும் D யும் E யும்
    (4) B யும் C யும் E யும் (5) A யும் B யும் E யும்

[பக். 4 ஐப் பார்க்க

2102

27. திருச்சபையிலிருந்து முற்றாக விலக்கப்படக் காரணமாக அமையும் மூன்று தலையாய பாவங்கள்
    (1) சிலை வழிபாடு, களவு, பொய்க்குற்றச்சாட்டு
    (2) கொலை, பொய்க்குற்றச்சாட்டு, களவு
    (3) சிலை வழிபாடு, கொலை, விபசாரம்
    (4) கொலை, விபசாரம், பொய்க்குற்றச்சாட்டு
    (5) சிலை வழிபாடு, கொலை, களவு

28. ஒனேசிம் என்கின்ற அடிமையை கிறிஸ்துவில் தனது சொந்த சகோதரனாக ஏற்றுக்கொள்ளுமாறு திருத்தூதர் பவுல் யாருக்கு எழுதினார் ?
    (1) புனித பர்னபாவிற்கு
    (2) எபேசியருக்கு
    (3) புனித மாற்குவிற்கு
    (4) கொலோசையருக்கு
    (5) பிலமோனுக்கு

29. கணவன்-மனைவியின் கடமைகள் குறித்து புனித பவுல் பேசியுள்ள **இரண்டு** மடல்கள் யாவை ?
    A - உரோமைய திருமடல்
    B - கொரிந்திய திருமடல்
    C - எபேசிய திருமடல்
    D - கலாத்திய திருமடல்
    E - தெசலோனிக்கே திருமடல்
    (1) A யும் B யும்
    (2) B யும் C யும்
    (3) A யும் C யும்
    (4) B யும் E யும்
    (5) D யும் E யும்

30. அலெக்சாந்திரியா இறையியற் கல்லூரியைச் சார்ந்த திருச்சபைத் தந்தையர்கள் **மூவர்**
    (1) புனித சிரில், புனித கிறிஸ்சோஸ்தம், புனித ஜெரோம்
    (2) ஒரிஜென் புனித அம்புரோஸ், புனித பசில்
    (3) புனித சிரில், எபுசேபியஸ், ஒரிஜென்
    (4) புனித எபுசேபியஸ், புனித பசில், புனித ஜெரோம்
    (5) புனித கிறிஸ்சோஸ்தம், ஒரிஜென், புனித பசில்

31. உரோமைப் பேரரசின் மேற்குப் பகுதி கோத்திரப் படையெடுப்பினால் அழிக்கப்பட்டது,
    (1) 3ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில்
    (2) 5ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்
    (3) 8ஆம் நூற்றாண்டின் மத்தியபகுதியில்
    (4) 10ஆம் நூற்றாண்டில்
    (5) வேதகலாபனைக்கால முடிவின்போது

32. எந்தக் கோத்திரம் அலரிக் என்பவரின் தலைமையின்கீழ் உரோமையை அழித்தது ?
    (1) லும்பார்டியோஸ்
    (2) பிராங்ஸ்
    (3) வண்டல்ஸ்
    (4) விசிகோத்ஸ்
    (5) ஹங்ஸ்

33. கொன்ஸ்தாந்தின்நோபிள் பட்டணம் இன்று எப்பெயரால் அழைக்கப்படுகின்றது ?
    (1) தமஸ்கு
    (2) நேப்பிள்ஸ்
    (3) எடிசா
    (4) சீதோன்
    (5) இஸ்தான்புல்

34. துறவற வாழ்வின் **மூன்று** வார்த்தைப்பாடுகள்
    (1) கீழ்ப்படிவு, தாழ்ச்சி, ஏழ்மை
    (2) ஏழ்மை, கற்பு, தாழ்ச்சி
    (3) கீழ்ப்படிவு, கற்பு, ஏழ்மை
    (4) கீழ்ப்படிவு, எளிமை, ஏழ்மை
    (5) தாழ்ச்சி, கற்பு, கீழ்ப்படிவு

35. 18ஆம் நூற்றாண்டில் பரிணாமம் குறித்த கொள்கையினை வழங்கிய கத்தோலிக்கக் குருவானவர்
    (1) அலெக்சாண்டர் பிளெமிங்
    (2) அல்பர்ட் அயின்ஸ்டையின்
    (3) சாள்ஸ் டார்வின்
    (4) பப்ரிஸ்ட் டி லாமாக்
    (5) ரெயார்ட் டே சார்டேன்

36. தனது சொந்த வாழ்வினையும் உள்ளடக்கியதாக புனித அகுஸ்தீனரால் எழுதப்பட்ட உலகப் பிரசித்திப்பெற்ற புத்தகம்
    (1) சும்மா தியோலஜி
    (2) வாழ்க்கை அறிக்கை / தன்னிலை ஏற்பு
    (3) இறைவனின் நகரம்
    (4) மூவொரு இறைவன்
    (5) அப்போலஜியா

[பக். 5 ஐப் பார்க்க

37. புனித அகுஸ்தீனாரின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய திருச்சபைத் தந்தை
(1) புனித அம்புரோஸ்
(2) புனித ஜஸ்ரின்
(3) புனித ஜெரோம்
(4) புனித இஞ்ஞாசியார்
(5) புனித அத்தனாசியார்

38. பிரசித்திபெற்ற 'த டிவைன் கொமடி' (The Divine Comedy) எனும் இலக்கிய நூலை எழுதிய ஆசிரியர்
(1) கபிரியல் போரே
(2) வேர்ஜில்
(3) டான்டே அலிகியேரி
(4) லுட்விக் வான் பீத்தோன்
(5) பிரட்ரிக் ஹன்டல்

39. பைசென்தியன் கட்டிட கலையமைப்பில் அமைக்கப்பட்ட பிரசித்திபெற்ற புனித சோபியா ஆலயம் அமைந்துள்ள இடம்
(1) உரோமை
(2) சைப்பிரஸ்
(3) நேப்பிள்ஸ்
(4) மொஸ்கோ
(5) கொன்ஸ்தாந்தின்நோபிள்

40. லியோனாடோ டா வின்சியின் பிரசித்திபெற்ற **இரண்டு** சித்திரங்கள்
(1) இறுதி இராவுணவு, மொனாலிசா
(2) மொனாலிசா, உலகப்படைப்பு
(3) இறுதி இராவுணவு, நடுத்தீர்வை
(4) நடுத்தீர்வை, உலகப்படைப்பு
(5) இறுதி இராவுணவு, உலகப்படைப்பு

41. பின்வருவோருள் கல்வி, இலக்கியம் ஆகிய துறைகளில் பங்களிப்பு நல்கிய **இரண்டு** அறிஞர்கள்
A - அருட்தந்தை திஸ்ஸ பாலசூரிய
B - அருட்தந்தை அதிரியான் ஜோசப்
C - அருட்தந்தை ஜோன் பஹேமுன
D - அருட்தந்தை சேவியர் தனிநாயகம்
E - அருட்தந்தை டொன் பீற்றர்

(1) A யும் B யும்
(2) B யும் D யும்
(3) A யும் C யும்
(4) C யும் E யும்
(5) D யும் E யும்

42. அருட்பணி யாக்கோம்மே கொன்சால்வேஸ் அடிகளாரின் கவிப் படைப்புகளைத் தொகுத்து வெளியிட்டவர்
(1) அருட்பணி மார்சலீன் ஜெயக்கொடி
(2) ஆயர் எட்மண்ட பீரிஸ்
(3) அருட்பணி S.H. தாவீது
(4) அருட்பணி S.G. பெரேரா
(5) சுவாமி ஞானப்பிரகாசர்

43. இலங்கையின் வடபகுதியில் கல்வியினை உயர்த்தும் நோக்கில் ஆயர் பொஞ்சீன் அவர்களால் உருவாக்கப்பட்ட சுதேச துறவற சபை
(1) பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்கள் சபை
(2) சிலுவைக் கன்னியர் சபை
(3) புனித சூசையப்பர் அருட்சகோதரர்கள் சபை
(4) அமலமரித் தியாகிகள் சபை
(5) தூய சம்மனசுகளின் சபை

44. இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சியின்போது சிங்கள இலக்கிய மற்றும் சமய நூலாக்கற் பணியில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டு குருக்கள் **மூவர்**
A - இம்மானுவேல் கொஸ்தா
B - யாக்கோமே கொன்சால்வேஸ்
C - பெட்ரோ பிரான்சிஸ்கோ
D - செபஸ்தியான் பேபான்சே
E - அந்தோனியோ பெக்செடோ

(1) A யும் B யும் C யும்
(2) A யும் B யும் D யும்
(3) A யும் C யும் E யும்
(4) B யும் D யும் E யும்
(5) C யும் D யும் E யும்

45. இலங்கையின் மிகவும் பழமையான தமிழ்க் கத்தோலிக்கப் பத்திரிகை
(1) ஞானப்பள்ளு
(2) பாதுகாவலன்
(3) உதயதாரகை
(4) மன்னா
(5) வெட்டாப்பு

The National e-learning Portal for The General Education

[பக். 6 ஐப் பார்க்க

46. சிங்கள நாட்டுக்கூத்துக்கு அடிப்படையாய் அமைந்தது
    (1) தமிழ் நாட்டுகூத்து
    (2) போத்துக்கேய நாடகங்கள்
    (3) சிங்கள பாரம்பரிய நாடகங்கள்
    (4) பாடுகளின் காட்சிகள்
    (5) கோவா பிரதேச நாடகங்கள்

47. இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆரம்பிக்கப்பட முயற்சிகளை மேற்கொண்டவர்
    (1) திருத்தந்தை 23ஆம் அருளப்பர்
    (2) திருத்தந்தை 6ஆம் சின்னப்பர்
    (3) திருத்தந்தை 12ஆம் பத்திநாதர்
    (4) திருத்தந்தை 1ஆம் அருள் சின்னப்பர்
    (5) திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்

48. இலங்கையில் மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரசித்திபெற்ற யாத்திரை மையங்கள் **மூன்று**
    A - கொச்சிக்கடை
    B - மாத்தறை
    C - மருதமடு
    D - தேவத்தை
    E - ஹினிதுமை
    (1) Aயும் Bயும் Cயும்
    (2) Aயும் Bயும் Eயும்
    (3) Bயும் Cயும் Dயும்
    (4) Bயும் Dயும் Eயும்
    (5) Cயும் Dயும் Eயும்

49. புதிய திருத்தந்தை முதலாம் பிரான்சீஸ் பிறந்த நாடு
    (1) இத்தாலி
    (2) ஆர்ஜென்டீனா
    (3) பிரேசில்
    (4) பெரு
    (5) ஸ்பெயின்

50. ஜனவரி 1ஆம் திகதி 'உலக சமாதான நாள்' ஆக யாரால் பிரகடனப்படுத்தப்பட்டது ?
    (1) ஐக்கிய நாடுகள் அமைப்பினால்
    (2) முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடியால்
    (3) திருத்தந்தை 23ஆம் அருளப்பரால்
    (4) பொதுநலவாய நாடுகளின் அமைப்பினால்
    (5) திருத்தந்தை 6ஆம் சின்னப்பரால்

The National e-learning Portal for The General Education

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II
கிறிஸ்தவ நாகரிகம் II
Chiristian Civilization II

49 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) அலெக்சாந்திரியா இறையியற் கல்லூரியின் பொதுவான இறையியற் பண்புகள் **நான்கினைப்** பெயரிடுக.
   (ii) முதல் நான்கு நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பேதகங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவ்வற்றின் ஒவ்வொரு போதனையையும் எழுதுக.
   (iii) வேதகலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் **நான்கைப்** பெயரிடுக.
   (iv) உரோமைய சமய சடங்குகளின் தாக்கத்தினால் உருவான கிறிஸ்தவ வழிபாட்டு விடயங்கள் **நான்கைப்** பெயரிடுக.
   (v) திருச்சபையின் இறையியலாளரான புனித அகுஸ்தீனாரின் **நான்கு** பணிகளை எழுதுக.

2. (i) மத்தியகாலப் பகுதியில் திருச்சபையில் காணப்பட்ட பண்புகள் **நான்கினைத்** தருக.
   (ii) மறுமலர்ச்சியின் காரணமாக மத்தியகால சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (iii) புரட்டஸ்தாந்து புரட்சியில் ஈடுபட்ட **நான்கு** தலைவர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் ஒவ்வொருவரினதும் **ஒரு** படிப்பினையைக் குறிப்பிடுக.
   (iv) திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் விளைவால் திருச்சபையில் ஏற்பட்ட **நான்கு** புதுப்பித்தல்களைக் குறிப்பிடுக.
   (v) மத்தியகாலப் பகுதியில் திருச்சபையின் புதுப்பித்தலுக்கு ஆதரவு நல்கிய **நான்கு** துறவற சபைகளையும், அவற்றினை ஆரம்பித்து வைத்தவர்களையும் பெயரிடுக.

3. (i) ஐரோப்பாவிற்கு வெளியே நற்செய்தியை எடுத்துச்சென்ற **நான்கு** ஐரோப்பிய இனத்தவர்களைப் பெயரிடுக.
   (ii) நற்செய்தியை அறிவிக்க ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் வெளிநாடுகளில் பயன்படுத்திய நேரடியான, மறைமுகமான உத்திகள் **நான்கினைப்** பெயரிடுக.
   (iii) இந்தியாவில் காணப்படும் கீழைத்தேய திருச்சபைகள் **நான்கின்** பெயர்களை எழுதுக.
   (iv) கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதனை நிரூபிக்கத் தேவையான **நான்கு** வரலாற்றுக் காரணங்களை எடுத்துக்காட்டுக.
   (v) ஆசியாவில் கிறிஸ்தவம் பரவுவதற்குத் தடையாக இருந்த **நான்கு** காரணிகளை எழுதுக.

## பகுதி II

4. "திருத்தூதர் பவுலின் மடல்கள் தொடக்கத் திருச்சபையின் சிந்தனை வடிவம் மற்றும் ஆன்மீக விழுமியங்களின் வளர்ச்சிக்கு உதவி புரிந்தன".
   (i) திருத்தூதர் பவுலின் பார்வையில் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலான உறவினை விளக்குக.
   (ii) "திருத்தூதர் பவுலின் படிப்பினையின்படி கிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவத்தின் அடிப்படையாகின்றது". விளக்குக.
   (iii) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த திருத்தூதர் பவுலின் மடலில் குறிப்பிடப்பட்டுள்ள **நான்கு** அடிப்படைப் படிப்பினைகளை விளக்குக.
   (iv) திருமணம், குடும்ப வாழ்வு குறித்த திருத்தூதர் பவுலின் படிப்பினைகள் எந்தளவிற்கு நவீன சமூகத்திற்குப் பொருத்தமானது என்பதை விளக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

5. "துறவற சபைகள் திருச்சபையின் ஆன்மீக வாழ்வு வளர்ச்சிக்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்துள்ளன".

(i) பாலைவனத்து தந்தையர்கள் குறித்து சிறு விளக்கம் தருக.

(ii) சிஸ்ரேஷியன் துறவற சபையைப் பற்றிச் சிறு விளக்கம் தருக.

(iii) மத்தியகாலப் பகுதியில் திருச்சபையின் மறுமலர்ச்சிக் காலத்தில் இயேசு சபையினர் ஆற்றிய பணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(iv) இலங்கையிலுள்ள **இரண்டு** ஆண் அல்லது பெண் துறவற சபைகளைப் பெயரிட்டு, அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

6. "கலையும் இசையும் ஆன்மீக வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்க முடியும்".

(i) ஐரோப்பாவில் காணப்பட்ட **இரண்டு** திருவழிபாட்டு இசை முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

(ii) மைக்கல் ஆஞ்சலோ, லியோனாடோ டாவின்சி, றபாயல் சன்சியோ, பிரா அஞ்சிலிக்கா ஆகியோருள் யாராவது **இருவரைப்** பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(iii) கிறிஸ்தவ சிற்பக்கலையினைச் சுருக்கமாக விளக்குக.

(iv) மொசேயிக்கலை மற்றும் வர்ணக் கண்ணாடிக்கலை குறித்து விளக்குக.

7. "திருச்சபையின் தொடக்கம் முதல் அது முழு மனித விருத்திக்குப் பங்களிப்புச் செய்து வருகின்றது".

(i) திருத்தூதர் யாக்கோபுவின் சமூகநீதி, தர்மச் செயல்கள் பற்றிய படிப்பினைகளைச் சுருக்கமாக விளக்குக.

(ii) நீதியையும் சமாதானத்தையும் சமூக நியாயத்தையும் ஏற்படுத்துவதில் இலங்கைத் திருச்சபையின் பங்களிப்பினை விளக்குக.

(iii) ஆசியாவில் மலிந்து காணப்படும் சமூக அநீதிகள் மட்டில் திருச்சபை எவ்வாறு பதிலளித்துள்ளது என விளக்குக.

(iv) ஆசிய ஆயர் பேரவை (FABC) அல்லது உலக கிறிஸ்தவ சம்மேளனம் (WCC) குறித்துச் சுருக்கமாக விளக்குக.

8. "சமாதானமும் ஒருமைப்பாடும் இன்றைய சமூகத்தின் பாரிய தேவைகளாகும்".

(i) சமாதானம் என்றால் என்னவென்பதை இயேசு கிறிஸ்துவின் போதனையின் அடிப்படையில் விளக்குக.

(ii) உலக சமாதானத்தைக் கொண்டு வருவதற்குத் தேவையான முக்கிய காரணிகளைத் தருக.

(iii) இலங்கை போன்ற பல்சமய சமூகத்தில் சமய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்குக.

(iv) சமய உரையாடலுக்குத் தேவையான காரணிகள் யாவை ? விளக்குக.

* * *